திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைப் பகுதிகளிலே ஓடும் சேரன் போக்குவரத்துக் கழகம், அண்ணா போக்குவரத்துக் கழகம் ஆகிய நிறுவனங்கள் தவிர மற்றப் போக்குவரத்து நிறுவனங்களில் மினி பஸ்கள் சரியாக விடப்படுவதில்லை என்று சொல்லப்படுகிறது. ஆகவே, அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் நஷ்டம் அடையும் வழித் தடங்களில் அந்த இழப்பை ஓரளவிற்கு குறைக்கும் வகையிலும், கிராமப் பகுதி மக்கள் பயனடையும் வகையிலும் எல்லாப் போக்குவரத்துக் கழகங்களிலும் மினி பஸ்கள் விடுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, அரசினுடைய சட்டப்படி இப்படிப்பட்ட வழித்தடங்களில்தான் மினி பஸ்கள் விடப்பட வேண்டுமென்று வரைமுறையை விதித்திருக்கிறோம். அந்த வரைமுறைக்கு உட்பட்டு எந்தெந்த வழித் தடங்கள் வருகின்றனவோ அங்கு விட்டுக் கொண்டிருக்கிறோம். அதை வேகப்படுத்தும் வகையில் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது. எல்லாப் போக்குவரத்துக் கழகங்களிலும் இந்த நடவடிக்கையை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

மோட்டார் வாகன விபத்துக்களில் இறந்தவர்கள் குடும்பங்களுக்கும், காயமடைந்தவர்களுக்கும் வழங்கப்படும் நிதி உதவி :

*வினா எண். 579—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) மோட்டார் வாகன விபத்தில் இறந்தவர்களின் குடும்பங்களுக்கும், காயமடைந்தவர்களுக்கும், விபத்து நடந்த உடனேயே Ex-Gratia Payment வழங்க வகை செய்யப்பட்டுள்ளதா?

ஆ) ஆம் எனில், எவ்வளவு தொகை வழங்கப்படுகிறது?

(இ) அந்த தொகை உயர்த்தப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) (ஆ) மற்றும் (இ) : விவர அறிக்கை *ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

---

*........137ம் பக்கத்தில் இணைப்பு II-ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

1982 மார்ச் 20]

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்படிச் சாலை விபத்துக்களில் மாண்டவர்களின் குடும்பங்களுக்கு உதவித் தொகை அளிக்கின்ற இந்தச் சிறப்பு மிகுத் திட்டம் எப்பொழுதிலிருந்து செயல்பட்டு வருகிறது? இந்தத் தொகையை இறந்தவர்களின் குடும்பங்களுக்குக் கொடுக்கும்பொழுது, நீதிமன்றங்களில் வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகையில் அந்தப் பணம் கழித்துக் கொள்ளப்படுகிறதா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, இது 20—2—1978-லிருந்து முதலமைச்சர் விபத்து நிவாரண நிதியில் இருந்து கொடுக்கப்பட வேண்டுமென்று ஆணையிடப்பட்டு உள்ளது. இதிலே அவர்களுக்குக் கிடைக்கின்ற அந்த இழப்பீட்டுத் தொகையிலிருந்து கழிக்கப்படுவதாக சூழ்நிலை இல்லை, கழிக்காமல் இதைத் தனியாகக் கொடுக்கிறோம்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்படிக் கொடுக்கப்படும் ஆயிரம் ரூபாய் உதவித் தொகை காவல் துறையினருக்கும், மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் எழுதி அதற்குப் பிறகு கிடைப்பதாலே கொஞ்சம் காலதாமதம் ஏற்படுகிறது. ஆகவே, விபத்தில் மாண்ட உடனேயே இந்தத் தொகையைக் கொடுக்கின்ற அளவிற்கு வழி வகை செய்ய பரிசிலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, அரசினுடைய சட்டப்படி இறந்தவர்கள் எப்படிப்பட்ட சூழ்நிலையில் இறந்திருக்கிறார்கள், தகுதி என்ன, அந்தப் பணத்தை யாரிடத்தில் கொடுப்பது, அந்தப் பணத்தைப் பெறக் கூடிய தகுதி படைத்தவர்கள் யார் என்ற இவைகளை எல்லாம் பார்த்து தான் கொடுக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இறந்த உடனேயே கொடுக்க வேண்டுமென்றால் யார் யாரோ வாங்கிக் கொண்டு போவார்கள். ஆகவே தான் பார்த்துக் கொடுக்க வேண்டிய சூழ்நிலை இருப்பதால்தான் கொஞ்சம் காலதாமதம் ஏற்படுகிறது.

மாணவர்களுக்கு வழங்கப்படும் பஸ் கட்டணச் சலுகை :

* வினா எண். 580 :—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை அளிப்பாரா :

போக்குவரத்துக் கழகங்களில் மாணவர்களுக்கு வழங்கப்படும் பஸ் கட்டணச் சலுகையால் ஏற்படும் இழப்புத் தொகைப் அரசிடமிருந்து பெறப்படுகிறதா ?